# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

### கத்தோலிக்க மறைப் பாடசாலை இறுதிச் சான்றிதழ்ப் பரீட்சை - 2024

**ஒழுங்குகளும் பாடத்திட்டமும்**

2024 ஆம் ஆண்டுக்கான கத்தோலிக்க மறைப் பாடசாலை இறுதிச் சான்றிதழ்ப் பரீட்சைக்காக விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ள அதேவேளை பரீட்சை 2025, யூன் மாதம் நடாத்தப்படுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

02. **உப அட்டவணை 01** இல் காட்டப்பட்டுள்ள அனைத்து மாவட்டங்களிலும் விண்ணப்பதாரர்களின் எண்ணிக்கைக்கேற்ப பரீட்சை நிலையங்கள் அமைக்கப்படும். எனினும் ஒரு நகரத்தில் போதியளவு விண்ணப்பதாரர்கள் காணப்படாத சந்தர்ப்பத்தில் அந்த நகரத்தின் பரீட்சை நிலையம் இரத்துச் செய்யப்பட்டு குறித்த விண்ணப்பதாரர்கள் அந்நகரத்துக்கு அருகாமையிலுள்ள வேறு பரீட்சை நிலையத்துக்கு அனுப்பப்படுவர்.

03. **மொழிமூலம்**.- இப்பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் மட்டும் நடைபெறுவதோடு ஒரு விண்ணப்பதாரி பரீட்சைக்குத் தோற்ற தான் விரும்பிய ஒரு மொழியில் மாத்திரமே அனுமதிக்கப்படுவர்.

04. **தகைமைகள்**.-

இப்பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் அனைத்து விண்ணப்பதாரர்களும் பின்வரும் தகுதிகளில் ஏதாவது ஒரு தகுதியைப் பெற்றிருத்தல் வேண்டும்:

4.1 கத்தோலிக்க மறைப் பாடசாலை 10 ஆம் ஆண்டு சித்தி பெற்று, மறைப் பாடசாலை இறுதியில் சான்றிதழ் பெற்று குறைந்தது ஒரு வருட கற்பித்தல் அனுபவம் கொண்டிருத்தல்;

4.2 கல்விப் பொதுத் தராதரப்பத்திர (சாதாரண தரம்) பரீட்சையில் கத்தோலிக்க சமய (கிறிஸ்தவ சமயம் ரோமன் கத்தோலிக்கம்) பாடத்தில் சித்தியடைந்திருத்தல்;

4.3 மறை மாவட்டங்களில் நடைபெறும் வருடாந்த மறைக் கல்விப் பரீட்சையில் 11 ஆம் ஆண்டு வரை பூர்த்தி செய்திருத்தல்.

குறிப்பு :

இப் பரீட்சைக்குத் தோற்றும் அனைத்து விண்ணப்பதாரிகளும் மேற்கூறிய 4 ஆவது பந்தியில் குறிப்பிடப்படும் தகுதிகளில் ஒன்றையேனும் பெற்றிருப்பதாக கிறிஸ்தவ சமய விவகார திணைக்களத்தில் அனுமதி பெற்ற கத்தோலிக்க மறைப்பாடசாலை அதிபர் அல்லது பங்குக் குருவானவர் மூலம் உறுதிப்படுத்தப்பட்டு விண்ணப்பப்படிவம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

05. **விண்ணப்பித்தல்** :

5.1 கத்தோலிக்க மறைப் பாடசாலை இறுதிச் சான்றிதழ்ப் பரீட்சைக்காக இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள மறைப் பாடசாலைக்கு தேவையான விண்ணப்பப்படிவங்கள் மற்றும் அறிவுறுத்தல்கள் தபால் மூலமாக இதுவரையில் அனுப்பி வைக்கப்பட்டுள்ள அதேவேளை www.doenets.lk என்ற இணையத்தளத்தினூடாக தரவிறக்கம் செய்துகொள்ளக்கூடிய வசதிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

5.2 யாரேனும் விண்ணப்பதாரி ஒருவருக்கு தனிப்பட்ட விண்ணப்பதாரியாகப் பரீட்சைக்கு தோற்ற இடமளிக்கப்படமாட்டாது. ஆயினும் பந்தி 4 இல் காணப்படும் தகைமைகள் பெற்றுள்ள யாரேனும் பரீட்சைக்குத் தோற்ற விரும்புவாராயின் தமது வதிவிடத்துக்கு அருகாமையில உள்ள மறைப் பாடசாலை மூலம் ரூபா 200.00 பரீட்சைக் கட்டணம் செலுத்தி பரீட்சைக்குத் தோற்றுவதற்காக விண்ணப்பிக்க முடியும். அதற்கான அறிவுறுத்தல்கள் அனைத்தும் மறைப்பாடசாலை அதிபர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளன.

5.3 உரிய மறைப் பாடசாலை மூலம் முன்வைக்கப்பட வேண்டிய இவ் விண்ணப்பப்படிவத்தினை இரண்டு பிரதிகளாக பூரணப்படுத்தி மூலப் பிரதியினை பரீட்சை ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பி வைக்க வேண்டிய அதேவேளை இரண்டாம் பிரதியினை அதிபரிடம் வைத்திருக்க வேண்டும். விண்ணப்பப் படிவம் இரண்டும் அதிபர் மூலம் கையொப்பமிடப்பட்டிருத்தல் வேண்டும்.

5.4 விண்ணப்பப்படிவங்களை ஏற்றுக்கொள்ளப்படும் திகதி 2025.02.07 ஆந் திகதி ஆரம்பமாகி 2025.03.07 ஆந் திகதி முடிவுறுத்தப்படும்.

5.5 விண்ணப்பப்படிவங்கள் பிழையின்றி பூரணப்படுத்தப்படல் வேண்டும். அவ்வாறு இல்லாத விண்ணப்பப் படிவங்கள் மற்றும் விண்ணப்பப் படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பப்படிவங்கள் எந்தவித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும்.

5.6 மறைப் பாடசாலையின் பதிவிலக்கம் மற்றும் முகவரி பிழையின்றி குறிப்பிடப்படல் வேண்டும். மறைப் பாடசாலையின் முகவரியில் மாற்றங்கள் இருப்பின் அதனை அறியத்தருவதோடு மறைப் பாடசாலை அதிபருடன் தொடர்பு கொள்ளக் கூடிய தொலைபேசி இலக்கத்தினையும் குறிப்பிடவும். பூரணப்படுத்திய விண்ணப்பப் படிவங்களை பதிவுத் தபாலில் “பரீட்சை ஆணையாளர் நாயகம், நிறுவனம்சார் பரீட்சைகள் ஒழுங்கமைப்புக் கிளை, இலங்கைப் பரீட்சைத் திணைக்களம், த. பெ. 1503, கொழும்பு” என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டும். விண்ணப்பப்படிவங்கள் கிடைக்கப்பெற்றமை தொடர்பாக அறியத்தர மாட்டாது. விண்ணப்பப்படிவங்கள் அனுப்பப்படும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் “கத்தோலிக்க மறைப் பாடசாலை இறுதிச் சான்றிதழ்ப் பரீட்சை-2024” எனக் குறிப்பிடுவதோடு விண்ணப்பிக்கும் நகரத்தினையும் குறிப்பிடவும்.

5.7 விண்ணப்பதாரர்களின் உரிய சான்றிதழ்கள் தொடர்பாகவும் தகைமைகள் உள்ளமை தொடர்பாகவும் விண்ணப்பப்படிவங்கள் சான்றுபடுத்தும் மறைப் பாடசாலை அதிபர் அல்லது குருவானவர் பொறுப்பேற்க வேண்டும்.

5.8 பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் அனைத்து விண்ணப்பதாரர்கள் விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப் பட்டுள்ள பூரணப்படுத்தப்பட்ட தகவல்களை தனிப்பட்ட முறையில் பரிசீலனை செய்து கையொப்பம் இடல் வேண்டும்.

06. **பரீட்சை கட்டணம்** : இப்பரீட்சைக்கான பரீட்சைக் கட்டணம் ரூபா 200.00 ஆகும். ஆயினும் முதல் முறையாகப் பரீட்சைக்குத் தோற்றும் விண்ணப்பதாரிகள் இப்பரீட்சைக் கட்டணம் செலுத்த வேண்டியதில்லை. குறைவான பெறுபேற்றை பூரணப்படுத்துவதற்காக விண்ணப்பிக்கும் ஒரு பாடத்துக்கான பரீட்சைக் கட்டணம் ரூபா 50.00 ஆகும்.

6.1 **பரீட்சைக் கட்டணம் செலுத்தல்** :

குறிப்பிட்ட மறைப் பாடசாலை அதிபர் மூலம் பரீட்சைக் கட்டணம் செலுத்த வேண்டிய அனைத்து விண்ணப்பதாரர்களிடமும் பரீட்சைக் கட்டணம் சேகரிக்கப்பட்டு இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் வருமானத் தலைப்பு இலக்கம் 20-03-02-13 இற்கு வரவிலிடுமாறு இலங்கையின் எந்த ஒரு தபால் நிலையத்திலும் கட்டணம் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை விண்ணப்பப்படிவத்தின் பின் புறத்தில் கழராதவாறு ஒட்டி அனுப்பவும் பற்றுச்சீட்டின் போட்டோப்பிரதி ஒன்றைத் தம்வசம் வைத்திருப்பது பயனுள்ளது (முத்திரை அல்லது காசுக்கட்டளை ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.)

6.2 எக்காரணத்தைக் கொண்டும் இப்பரீட்சைக்காக செலுத்தப்படும் கட்டணம் வேறு பரீட்சைக்காக மாற்றுவதோ அல்லது மீண்டும் திரும்பக் கொடுப்பதோ இடம்பெறாது.

07. **அனுமதிப்பத்திரம் :**

பரீட்சைக்காக உள்வாங்கப்படும் அனைத்து விண்ணப்பதாரிகளுக்குமான அனுமதிப்பத்திரம் பரீட்சை ஆணையாளர் நாயகம் மூலம் விண்ணப்பப்படிவங்கள் முன்வைக்கப்பட்ட மறைப் பாடசாலை அதிபருக்கு அனுப்பி வைக்கப்படும்.

7.1 பரீட்சைக்கு தோற்ற இருக்கும் அனைத்து விண்ணப்பதாரிகளும் தமது அனுமதிப்பத்திரத்தில் கையொப்பமிட்டு அதனை உறுதிப்படுத்தி பரீட்சைக்குத் தோற்றும் முதல் நாளிலேயே பரீட்சை மேற்பார்வையாளரிடம் அனுமதிப்பத்திரத்தை ஒப்படைத்தல் வேண்டும். யாரேனும் விண்ணப்பதாரி ஒருவர் தனது அனுமதிப்பத்திரத்தை ஒப்படைக்காமல் இருந்தாலோ அல்லது பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் தமக்கு வழங்கப்பட்ட பரீட்சை நிலையம் தவிர்ந்த வேறு பரீட்சை நிலையத்தில் பரீட்சைக்குத் தோற்றியிருந்தாலோ அவருடைய பரீட்சை விண்ணப்பம் நிராகரிக்கப்படும்.

7.2 அனுமதிப்பத்திரத்தில் பரீட்சார்த்தியின் கையொப்பமானது மறைப்பாடசாலை அதிபரால் அல்லது மிஷனுக்குப் பொறுப்பான குருவால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

7.3 பரீட்சை நடைபெறும் 07 நாட்களுக்கு முன் அனுமதிப்பத்திரம் கிடைக்காவிட்டால் மறைப் பாடசாலை அதிபர் மூலம் அது பற்றி தாமதமின்றி பரீட்சை ஆணையாளர் நாயகத்துக்கு அறியத்தரவும். அத்தகைய சந்தர்ப்பத்தில் விண்ணப்பப் படிவங்களை பதிவுத் தபாலில் அனுப்பிய பற்றுச்சீட்டின் போட்டோப் பிரதியுடன் கீழ் காணும் விபரத்தை சமர்ப்பிக்க வேண்டும் :-

(1) பரீட்சையின் பெயர் :
(2) மறைப் பாடசாலையின் பெயர் :
(3) மறைப் பாடசாலைக்கு வழங்கப்பட்டுள்ள கணினி இலக்கம் :
(4) விண்ணப்பதாரியின் முழுப் பெயர்:
(5) விண்ணப்பித்த பரீட்சை நிலையம்/ நகரம்:
(6) விண்ணப்பப்படிவம் தபாலிடப்பட்ட தபால் நிலையம் :
(7) விண்ணப்பப்படிவம் பதிவுத் தபாலிடப்பட்ட பற்றுச்சீட்டு :
(8) பரீட்சைக் கட்டணம் செலுத்தியிருப்பின் அதன் பற்றுச்சீட்டு :

08. ஆள் அடையாளம் :-

பரீட்சார்த்திகள் பரீட்சை நிலையத்துக்குள் தான் தோற்றும் அனைத்து பாடங்களுக்கும் பரீட்சை மேற்பார்வையாளர் திருப்தி அடையும் வகையில் தனது ஆள் அடையாளத்தை நிரூபிக்க வேண்டும். அதற்காக பின்வரும் ஏதேனுமோர் ஆவணம் ஏற்றுக்கொள்ளப்படும்.

- தேசிய ஆள் அடையாள அட்டை ;
- செல்லுபடியாகும் கடவுச்சீட்டு ;
- செல்லுபடியாகும் இலங்கை சாரதி அனுமதிப்பத்திரம்.

அவ்வாறு பரீட்சை விண்ணப்பதாரி ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்தக்கூடிய வகையில் முகத்தையும் இரு காதுகளையும் மூடாதவாறு பரீட்சை நிலையத்தினுள் பிரவேசிக்க வேண்டும். அவ்வாறு தமது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்தத் தவறும் விண்ணபதாரி பரீட்சை நிலையத்தினுள் அனுமதிக்கப்படமாட்டார். மேலும் பரீட்சை நிலையத்தினுள் அனுமதிக்கப்பட்ட நேரம் முதல் பரீட்சை முடிவடைந்து அவ்விடத்தில் இருந்து வெளியேறும் வரை பரீட்சகர்களுக்கு பரீட்சார்த்தியை இனங்காணக்கூடிய வகையில் விண்ணப்பதாரி முகம் மற்றும் இரு காதுகள் மறைந்திருக்காதவாறு இருத்தல் வேண்டும்.

09. சித்தியடைந்தமையைத் தீர்மானித்தலும் பரீட்சைப் பெறுபேறு வெளியிடுதலும் :- இப்பரீட்சைக்கான பாடங்களின் எண்ணிக்கை நான்கு ஆவதோடு, பரீட்சையில் முழு சித்தியடைவதற்கு பரீட்சார்த்தி ஒருவர் அப்பாடங்கள் நான்கிலும் சித்தியடைய வேண்டும். எவ்வாறாயினும் ஒரே தடவையில் உரிய பாடங்கள் நான்கில் ஒன்று மாத்திரம் சித்தியடையவில்லை எனின், அது குறை சித்தியாகக் கொள்ளப்படும். பரீட்சைக்குத் தோற்றிய வருடத்திலிருந்து அடுத்த இரண்டு பரீட்சை வருடங்களுக்குள் பரீட்சைக்குத் தோற்றி சித்தியடையாத பாடத்துக்கான பெறுபேற்றை சீர்செய்துகொள்ள வேண்டும். அவ்வாறு நூன சித்தி பெற்ற மாணவர்கள் மீண்டும் பரீட்சை எழுதும்போது சித்தியடையாத பாடத்திற்கு மாத்திரமே பரீட்சை எழுத அனுமதி வழங்கப்படும்.

9.1 எல்லாப் பாடத்திலும் ஒவ்வொரு வினாத்தாளுக்கும் 100 புள்ளிகள் உரித்தாவதோடு சித்தியடையும் தரங்களுக்கு புள்ளிகளின் வீச்சும் குறியீடும் பின்வருமாறு :

| *புள்ளிகள்* | *தரம்* | *குறியீடு* |
|---|---|---|
| 0-34 | சித்தியின்மை | F |
| 35-54 | சித்தி | S |
| 55-69 | திறமை சித்தி | C |
| 70-100 | உயர் திறமை சித்தி | D |

9.2 விண்ணப்பதாரியின் பெறுபேற்றுப் பட்டியல் உரிய மறைப் பாடசாலை அதிபருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும்.

10. **சான்றிதழ்.**- இப்பரீட்சையில் சித்திபெறும் அனைத்து விண்ணப்பதாரிகளுக்கும் பரீட்சை திணைக்களத்தின் மூலம் சான்றிதழ் வெளியிட ஒழுங்கு செய்யப்படும். உரிய சான்றிதழ் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் மறைப் பாடசாலை அதிபருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். இப்பரீட்சையில் சித்தியெய்தி, சான்றிதழ் கிடைக்காத எவரேனும் இருப்பின் அது தொடர்பாக மறைப் பாடசாலை அதிபர் ஊடாக பரீட்சை ஆணையாளர் நாயகம், நிறுவனம்சார் பரீட்சைகள் பெறுபேற்றுக் கிளை, இலங்கைப் பரீட்சைத் திணைக்களம், த. பெ. இல. 1503, கொழும்பு என்னும் முகவரிக்கு கடிதம் மூலம் கேட்டறிய முடியும்.

11. **விடைத்தாள் மீள்பரிசீலனை செய்தல்** : மறைப்பாடசாலை அதிபரின் வேண்டுகோளின்படி மாத்திரம் விடைத்தாள்கள் மீள்பரிசீலனைக்கு உட்படுத்தப்படும். பரீட்சைத் திணைக்களத்தினால் வெளியிடப்படும் மாதிரிப் படிவத்தின் மூலம் பரீட்சைப் பெறுபேறு வெளியிடப்பட்டு 30 நாட்களுக்குள் மீள்பரிசீலனைக்காக விண்ணப்பிக்க முடியும். இதற்கான கட்டணம் காலத்திற்குக் காலம் மாறுபடுவதனால், அதுபற்றி உரிய விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்படும்.எக்காரணம் கொண்டும் விண்ணப்பதாரிக்கோ அல்லது அவரது பிரதிநிதி ஒருவருக்கோ விடைத்தாளை பரீட்சிக்க இடமளிக்கப்படமாட்டாது.

12. **பாடத்திட்டமும் மாதிரி வினாத்தாளும்**:

இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் மூலம் ஒழுங்குசெய்யப்பட்டு நடாத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ள கத்தோலிக்க தஹம் பாடசாலை இறுதிச் சான்றிதழ் பரீட்சைக்குரிய பாடத்திட்டமும் மாதிரி வினாத்தாளும் 'பணிப்பாளர், தேசிய மறைக்கல்வி நிலையம், பல்கம் பிளேஸ், கொட்டா வீதி, கொழும்பு 08' என்னும் முகவரியின் கீழ்ப் பெற்றுக்கொள்ளலாம் அல்லது 011 2685459 எனும் தொலைபேசி இலக்கத்திற்குத் தொடர்பு கொள்ளலாம்.

13. இந்த ஒழுங்குகள், பாடத்திட்ட பத்திரம் ஆகியவற்றில் காட்டப்பட்டுள்ள விதிகளின்படி செயற்பட எல்லா பரீட்சை விண்ணப்பதாரிகளும் கடமைப்பட்டுள்ளவராவதோடு இந்த ஒழுங்குத் திட்டங்களில் தரப்படாத ஏதேனும் விடயம் தேவைக்கேற்ப பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் விருப்பத்தின்படி தீர்மானிக்கப்படும்.

14. சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் வெளிவரும் இந்த அறிவுறுத்தல்களில் மொழி மூலங்களில் ஏதேனும் பொருத்தமின்மை காணப்படின் அவ்வாறான சந்தர்ப்பங்களில் சிங்கள மொழி மூலமான அறிவுறுத்தலின் படி செயற்படவும்.

எச். ஜே. எம். சீ. அமித் ஜயசுந்தர,
பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,
பத்தரமுல்ல, பெலவத்த,
2025, பெப்புருவரி மாதம் 07.

**பரீட்சைக்கான பாடத்திட்டம்**

இப்பரீட்சை மூன்று மணித்தியாலங்கள் கொண்ட நான்கு வினாப்பத்திரங்களைக் கொண்டது.

**வினாப்பத்திரம் - 01**

**கத்தோலிக்க விசுவாசம்**

(அ) அப்போஸ்தலர்களின் விசுவாசப் பிரமாணத்தில் உள்ள அடிப்படை படிப்பினைகளை அடிப்படையாகக் கொண்டமைந்துள்ளது.

- இறைவன்
  - உலகின் ஆரம்பம்
  - படைப்பின் அழகு
  - படைப்பை பாதுகாத்தல்
  (தொடக்க நூல் 1, 2, 3)

- மீட்பர்
  - இயேசு கிறிஸ்து (அருளப்பர் 1 : 1-14)
  - விண்ணரசு படிப்பினைகள் (மத்தேயு 5, 6, 7)
  - உவமைகள் (மத்தேயு 13 : 1-52)
  -புதுமைகள் (யோவான் : 11 : 38-45 லூக்கா : 8 : 26 -39 மாற்கு : 2 : 1-12, 4 : 35-41 )

• தூய ஆவியின் செயற்பாடு
  - (யோவான் : 7 : 37 - 39, 14 : 15 - 31, 16 : 5 - 15)
  - (1 கொரிந்தியர் 12 : 4 - 11)

• கிறிஸ்தவ சபை
  - ஏகம், பரிசுத்தம்
  - கத்தோலிக்கம், அப்போஸ்தலிக்கம்
    திருச்சபை கிறிஸ்துவின் சரீரம்

    (ரோமையர் - 12 : 4 - 1,
    1 கொரிந்தியர் 12 : 12 - 31
  - திருச்சபையின் நிருவாகம்
  - குருத்துவப் பணி
  - துறவறப் பணி
  - பொது நிலையினர் பணி

• மீளுருவாக்கப் பணி
  - இறுதி தீர்ப்பு
  - புதிய வானம் புதிய பூமி
    (திருவெளிப்பாடு 21 : 1-4)

**வினாப்பத்திரம் - 02**

**கத்தோலிக்க வாழ்வு**

(ஆ) கத்தோலிக்க வாழ்வு வாழ திடம் பெற்றுத்தரும் திருவழிபாடு

✶ திருப்பலி மற்றும் சடங்குகள்
✶ பாஸ்கா மறைபொருள்
✶ தேவ வரப்பிரசாதங்கள்
✶ அருட்சாதனங்கள் (பொது இயல்பு)

✶ **புதுமுக அருளடையாளங்கள்**

• திருமுழுக்கு
• உறுதிப்பூசுதல்
• திவ்விய நற்கருணை

✶ **குணமளிக்கும் அருளடையாளங்கள்**

• ஒப்புரவு
• நோயில் பூசுதல்

✶ **சமூக பணிக்கான அருளடையாளங்கள்**

• திருமணம்
• குருத்துவம்

**வினாப்பத்திரம் - 03**

**கத்தோலிக்க விழுமியங்கள்**

(இ) பத்து கற்பனைகள் மற்றும் அன்புக் கட்டளைகள்.
இயேசுவின் 2 பிரதான கட்டளைகள்
பத்துக் கட்டளைகளை முழுமைப்படுத்திய யேசு (மத்தேயு 5 : 21-47)

மலைப்பொழிவு (லூக்கா 6: 17 - 49)

- புத்தியும் சுதந்திரமும்
- நற்குணங்கள்
- மனச்சாட்சி
- இறைவனை அன்பு செய்தல் (கட்டளைகள் 1-3)
- பிறரை அன்பு செய்தல் (4-10)
- பத்துக் கற்பனையில் அடங்கியுள்ள நற்பண்புகள்
- கத்தோலிக்க பண்புகள்

**வினாப்பத்திரம் - 04**

(ஈ) இறையன்பை கட்டி எழுப்பக்கூடிய செபங்கள்

- பழைய ஏற்பாட்டின் செபம்
  - ஆபிரகாம்
  - மோயீசன்

- புதிய ஏற்பாட்டின் செபம்
  - கிறிஸ்து செபித்த விசேட சந்தர்ப்பங்கள்
  - செபம் பற்றிய விசேட படிப்பினைகள் (லூக் 11 : 1-3)

- திருச்சபை வாழ்க்கைக்குள் செபம்
  - வாழ்த்துதல்
  - மகிழ்ச்சி
  - புகழ்ச்சி
  - நன்றி
  - விண்ணப்பம்
  - மத்தியஸ்தர்
  - தியானம்

- யேசு கற்பித்த செபமும் ஏழு விண்ணப்பங்களும்
  - உமது நாமம் போற்றப் பெறுக
  - உமது அரசு வருக
  - உமது சித்தம் விண்ணுலகில் செயற்படுவது போல இம் மண்ணுலகிலும் செயற்படுவதாக
  - எங்கள் அன்றாட உணவை எங்களுக்குத் தந்தருளும்
  - எங்களுக்குத் தீமை செய்வோரை நாங்கள் மன்னிப்பது போல எங்கள் குற்றங்களையும் மன்னித்தருளும்
  - சோதனைகளில் எங்களை விழ விடாதேயும்
  - தீமையில் இருந்து காத்தருளும்

- விசேட பக்தி முயற்சிகள்
  - செபமாலை
  - நவநாள்
  - திருமணித்தியாலம்

பரிசீலிக்க வேண்டிய புத்தகங்கள்

- புதிய கத்தோலிக்க வேதநூல்
- விவிலியம், பெரியகுறிப்பிடம்
- 2 ஆம் வத்திக்கான் சங்க ஏடு

  ✶ திருவழிபாடு
  ✶ இன்றைய உலகில் திருச்சபை
  ✶ கிறிஸ்துவின் சபை
  ✶ பொது நிலையினர் அப்போஸ்தலிக்க சேவை

அட்டவணை - 01

| *மாவட்ட இலக்கம்* | *மாவட்டம்* | *நகர இலக்கம்* | *நகரம்* |
|---|---|---|---|
| 01 | கொழும்பு | 101 | கொழும்பு |
| | | 102 | மொறட்டுவை |
| 02 | கம்பஹா | 201 | கம்பஹா |
| | | 202 | நீர்கொழும்பு |
| | | 203 | கந்தானை |
| | | 204 | களனி |
| 03 | களுத்துறை | 301 | களுத்துறை |
| 04 | கண்டி | 401 | கண்டி |
| 05 | மாத்தளை | 501 | மாத்தளை |
| 06 | நுவரெலியா | 601 | நுவரெலியா |
| 07 | காலி | 701 | காலி |
| 08 | மாத்தறை | 801 | மாத்தறை |
| 09 | அம்பாந்தோட்டை | 901 | அம்பாந்தோட்டை |
| 10 | யாழ்ப்பாணம் | 1001 | யாழ்ப்பாணம் |
| 11 | மன்னார் | 1101 | மன்னார் |
| 12 | வவுனியா | 1201 | வவுனியா |
| 13 | முல்லைத்தீவு | 1301 | முல்லைத்தீவு |
| 14 | கிளிநொச்சி | 1401 | கிளிநொச்சி |
| 15 | மட்டக்களப்பு | 1501 | மட்டக்களப்பு |
| 16 | அம்பாறை | 1601 | அம்பாறை |
| 17 | திருகோணமலை | 1701 | திருகோணமலை |
| 18 | குருநாகல் | 1801 | குருநாகல் |
| | | 1802 | குளியாப்பிட்டிய |
| 19 | புத்தளம் | 1901 | புத்தளம் |
| | | 1902 | சிலாபம் |
| | | 1903 | வென்னப்புவ |
| 20 | அநுராதபுரம் | 2001 | அநுராதபுரம் |
| 21 | பொலநறுவை | 2101 | பொலநறுவை |
| 22 | பதுளை | 2201 | பதுளை |
| 23 | மொணராகலை | 2301 | மொணராகலை |
| 24 | இரத்தினபுரி | 2401 | இரத்தினபுரி |
| 25 | கேகாலை | 2501 | கேகாலை |

02-23